# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 81 — 1973 ඔක්තෝබර් 12 වැනි සිකුරාදා — 1973.10.12

81 ம் இலக்கம் — 1973 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ம் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (III) — வியாபார உரிமை அடையாளங்களும் ஆக்க உரிமை விளம்பரங்களும்


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் | 205 | அலங்காரச் சித்திரச்சட்ட விளம்பரங்கள் | — |
| வியாபார உரிமை அடையாள அறிவிப்பு | — | வடிவ அமைப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள் | — |
| ஆக்க உரிமைக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள் | — | பலவிதமானவை | — |


கவனிக்க.—கைத்தொழிற் பிணக்குகள் (சிறப்பேற்பாடுகள்) சட்டமூலம் 1973 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் தேதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II ற்கு குறைநிரப்பியாகவும், ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 1973 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் தேதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II ற்கு குறைநிரப்பியாகவும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

### வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள்

**வியாபார உரிமை அடையாள அலுவலகம்**

வியாபார உரிமை அடையாளம் சம்பந்தமான சகல கடிதங்களும் வியாபார உரிமை அடையாளப் பகுதிப் பதிவாளர், கம்பெனிகள் பதிவாளர் அலுவலகம், கட்டடம் 5, எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

**பரிசோதனைக்குரிய நேரம்**

அலுவலகத்திற்குச் சொந்தமான பதிவேடுகளைப் பொது மக்கள் பார்வையிடுவதற்காக, அரசாங்க விடுமுறை நாட்கள் தவிர்ந்த கிழமை நாட்களில் 9 மணி தொடக்கம் 3 மணி வரையிலும், சனிக்கிழமைகளில் 9 மணி தொடக்கம் 11 மணி வரையிலும் திறந்திருக்கும்.

எனினும், பரிசோதனைக்குரிய விண்ணப்பப்பத்திரங்கள் கிழமை நாட்களில் மாலை 3 மணிவரையிலும், சனிக்கிழமைகளில் மத்தியானம் 12 மணி வரையிலும் ஏற்றுக் கொள்ளப்படும்.

**நிறங்களை வரையறுக்கும் வியாபார உரிமை அடையாளங்கள்**

ஒரு வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யப்படும் பொழுது, அது குறிப்பிட்ட நிறங்களுக்கு வரையறுக்கப்பட்டதென்று விண்ணப்பப் பிரசுரத்தில் குறிப்பிட்டிருந்தால் அந்த நிறங்கள் கூடுமானவரை வழக்கமான கட்டிடம் சார்ந்த முறையில் இத்துடனுள்ள அடையாளச் சின்னத்தில் காட்டப்படும்.

**கூட்டுச் சேர்க்கை**

150 ம் அதிகார வியாபார அடையாளச் சட்டத்தின் 23 ம் பகுதியின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒரு அடையாளம் இன்னொரு வியாபார அடையாளத்துடன் கூட்டுச் சேர்க்கப்படவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தால், அது அதன் உத்தியோக எண்ணினால் காட்டப்படும்.

**" அ " அல்லது " ஆ " பகுதியின் கீழ் விண்ணப்பம்**

பதிவேட்டின் " அ " பகுதியின் கீழ்வரும் விண்ணப்பங்கள் வேறு யாதும் எழுத்தின்றி உத்தியோக எண் மூலமாகவே காட்டப்படும். பதிவேட்டின் " ஆ " பகுதியின் கீழ்வரும் விண்ணப்பங்கள் உத்தியோக எண்ணுக்கு முன் " ஆ " என்ற எழுத்தால் தெளிவாகக் காட்டப்படும்.

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு மே மீ 05 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

## எதிர்ப்பு

பின்வரும் வியாபார அடையாளங்கள் பதிவு செய்வதை யாராயினும் எதிர்க்கக் காரணங்கள் இருந்தால் இந்த வர்த்தகப் பத்திரிகைத் தேதியிலிருந்து இரு மாதங்களுக்குள் அழிக்கப்படாத அல்லது படிவு செய்த 25 ரூபா பெறுமதியான முத்திரையுடன், ரீ. எம். 7 பத்திரத்தில் எதிர்ப்பு அறிவித்தலைச் சமர்ப்பிக்க வேண்டும். பதிவாளர் தகுதியானதெனக் கருதினுல், அவர் விதிக்கும் நிபந்தனைகளுடன் எதிர்ப்புத் தெரிவிக்கும் கால எல்லை நீடிக்கப்படலாம். பதிவு கோரும் விண்ணப்பகாரர் தனது விண்ணப்பத்தை மீளப்பெறுவதற்குச் சந்தர்ப்பத்தை அளிக்கும் முகமாக, முறைப்படியான அறிவித்தல் எதிர்ப்பு விண்ணப்பம் தயாரிப்பதற்கு வேண்டிய செலவைச் செய்யுமுன், அவருக்குக் கடிதமூலம் நியாயமான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். எதிர்ப்பவர் அத்தகைய அறிவித்தலைக் கொடுக்கத் தவறின், விண்ணப்பகாரர் எதிர்ப்பை எதிர்த்து வாதிடாதவிடத்து, எதிர்ப்பவரின் செலவு கோரும் மனு பரிசிலனை செய்யப்படும்போது அது கவனத்துக்கெடுக்கப்படும்.

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 34,163. (2)பெற்ற திகதி : 1972 ம் வருடம் பெப்ரவரி மாதம் 9 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : மோல்ரன் டிவலப்மென்றஸ் லிமிட்டட், பெரிய பிரித்தானியச் சட்டங்களின் அடிப்படையில் நிறுவப்பட்டதோர் கூட்டுப் பொறுப்புத் தாபனம், தஹோல், பிறட்ஃபோட் ஒன் ஆவொன், வில்ட்ஷயர், இங்கிலாந்து ; உற்பத்தியாளர்களும், வணிகர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜுலியஸ் அன்டு கிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 13. (6) வியாபாரச்சரக்கு : ஊர்திகளுக்கும், அவற்றின் மாற்றுப் பாகங்களுக்குமான வில்லுகளும் இடைநிறுத்து ஒழுங்கு முறைகளும். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**HYDRAGAS**

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1973 ம் ஆண்டு பெப்ரவரி மீ 5 ந உ.

10–375/1—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 33,540. (2) பெற்ற திகதி : 1971 ம் வருடம் மே மாதம் 15 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : எவ்–ஹொவ்மன்–லா–றேச் அன்டுகோ ; லிமிட்டட் கம்பெனி, பால், சுவிற்சலந்து என்ற முகவரியைச் சேர்ந்ததோர் சுவிஸ் கம்பெனி ; உற்பத்தியாளர்களும், வணிகர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜுலியஸ் அன்டு கிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 8. (6) வியாபாரச்சரக்கு : செய்திப்படச் சுருள்கள், படக்காட்சிகுரிய தனிப்படங்கள், ஒலிப்பட நாடாக்கள், ஒளிப்பட நாடாக்கள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி ஒருவம் :

**ROCOM**

இவ்வியாபார உரிமை அடையாளம் வியாபார உரிமை அடையாள இல. 33,097 பதிவு செய்யப்படுமிடத்து அத்தருணம் அதனுடன் இணைக்கப்படவிருக்கிறது.

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1973 ம் ஆண்டு பெப்ரவரி மீ 3 ந உ.

10–375/2—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

---

(1) வியாபாரச்சின்னம் இல. 32,155. (2) பெற்ற திகதி : 1969 ம் வருடம் நொவெம்பர் மாதம் 26 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : சிபா லிமிட்டட், சுவிற்சலந்து நாட்டுச் சட்டங்களின் அடிப்படையில் நிறுவப்பட்டதோர் கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பெனி, கிளிபெக்ஸ் றஸ்ஸி 141, பாஸிஸ், சுவிற்சலந்து, இரசாயன உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜுலியஸ் அன்டு கிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 1. (6) வியாபாரச்சரக்கு : நெசவுக் கைத்தொழில், தோல் பதனிடல், கடதாசி, பிளாஸ்டிக் கைத்தொழில்களில் உபயோகிக்கும் இரசாயன விளைவுகளும் பார்வைக் கண்ணாடிகளை ஒளியிடச் செய்யும் எதுகோல்களும். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**UVITEX**

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1973 ந் ஆண்டு ஜனவரி மீ 20 ந உ.

10–375/3—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 33,097. (2) பெற்ற திகதி : 1970 ம் வருடம் ஒக்டோபர் மாதம் 12 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : எவ். ஹொர்ப்மன்–லா றேச் அன்ட் கோ. லிமிட்டட் கம்பெனி, சுவிற்சலந்து நாட்டுச் சட்டங்களின் அடிப்படையில் நிறுவப்பட்டதோர் கம்பெனி, பால், சுவிற்சலந்து, உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜுலியஸ் அன்டு கிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 8. (6) வியாபாரச்சரக்கு : கருவிகள், சாதனங்கள் உட்படக் கற்பித்தல் கட்டளை பிறப்பித்தலுக்கான பொருட்கள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**ROCOM**

இவ்வியாபார உரிமை அடையாளம் வியாபார உரிமை அடையாள இல. 33,540 உடன் இணைக்கப்படவிருக்கிறது.

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1973 ம் ஆண்டு ஜனவரி மீ 26 ந உ.

10–375/4—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 28,467. (2) பெற்ற திகதி : 1966 ம் வருடம் நொவெம்பர் மாதம் 12 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : சென்ற். அந்தனீஸ் ஹாட்வெயர் ஸ்ரோஸ் லிமிட்டட் அன்ட் யெசுவடியன் சாமுவெல் ஞானம் "சென்ற் அந்தனீஸ் ஜிக் அன்டுரூல் என்ஜினியர்ஸ்" என்பதாக வியாபாரஞ் செய்பவர், 516, ஸ்கின்னர்ஸ் வீதி தெற்கு, கொழும்பு, உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : ஜோன் வில்சன் அவர்கள், வழக்கறிஞரும் நொத்தாரிசும் இல. 365, டாம் தெரு, கொழும்பு 12. (5) வகுப்பு : 12. (6) வியாபாரச்சரக்கு : கூர்மையான ஆயுதங்களாகிய புரி வெட்டும் அச்சுக்களும், கூர்முனையுள்ள ஆயுதங்களும் துளையிடும் கருவிகளும் பொருத்திகளும். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**ANTON**

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1972 ம் ஆண்டு ஒகஸ்டு மீ 29 ம் உ.

10–379—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 32,436. (2) பெற்ற திகதி : 1970 ம் வருடம் மார்ச் மாதம் 5 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : திவப்பிரமா லிமிடெட் சுவிற்சலந்து நாட்டுச் சட்டங்களினடிப்படையில் இணைக்கப்பட்டதோர் கம்பெனி, த. பெ. இல. 2428037 சூறிச் சுவிற்சலந்து என்ற முகவரியைச் சேர்ந்தது ; உற்பத்தியாளர்களும், விநியோகஸ்தர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : ஜோன் வில்ஸன் அவர்கள் இல. 365, டாம் வீதி, கொழும்பு 12. (5) வகுப்பு : 45. (6) வியாபாரச்சரக்கு : வண்ணப்பொருட்கள், அழகுபடுத்தும் தயாரிப்புக்கள், வாசனைத் திரவியங்கள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**DIVA**

இதற்கு எதிராக எடுத்துக்காட்டிய வியாபார உரிமை அடையாள இல. 28,224 இன் சொந்தக்காரருக்கு இவ்வியாபார உரிமை அடையா-

ளம் பொறித்த வர்த்தமானப் பத்திரிகையின் பிரதியொன்றை அனுப்புவதென்ற ஒப்புதலின் பேரில் இவ் வியாபார உரிமை அடையாளம் ஏற்றுக்கொள்ளப்பட்டிக்கிறது.

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1973 ம் ஆண்டு மார்ச் மீ 8 ம் வ.

10–378—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 33,705. (2) பெற்ற திகதி : 1971 ம் வருடம் ஜூலை மாதம் 14 ந் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : மற்சுனிற்ரு எலெக்றிக் இன்டஸ்றியல் கோ ; லிமிட்டட், ஜப்பானியச் சட்டங்களின் அடிப்படையில் நிறுவப்பட்டு இயங்கி வருமோர் கம்பெனி, இல. 1006 ஒஆசா கடோமா, கடோமஷி, ஒசாக்கா பிறிபெக்வுர் ஜப்பான் என்ற முகவரியில் தனது பிரதான வியாபார ஸ்தலத்தைக் கொண்டது ; உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர் ஜூலியஸ் அண்டு கிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 39. (6) வியாபாரச்சரக்கு : சோடனைக் கடதாசி தவிர்ந்த கடதாசி, அலுவலகத் தளபாடங்கள், புத்தகம் கட்டுதலுக்கான சாதனங்கள். (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :

PANA

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1973 ம் ஆண்டு ஜனவரி மீ 27 ம் வ.

10–376/1—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 34,275. (2) பெற்ற திகதி : 1972 வருடம் எப்பிரல் மாதம் 21 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : ஃபார்ப்வர்க்கே, இன்கோர்ப்பறேற்றட், மின்சோடா இராச்சியச் சட்டங்களின் அடிப்படையில் நிறுவப்பட்டு இயங்கி வருமோர் கூட்டுத்தாபனம், இல. 13451 அவெனியு ஒவ் த அமெரிக்காஸ், நியுயோர்க், நியுயோர்க், அமெரிக்க ஐக்கிய இராச்சியங்கள் ; உற்பத்தியாளர்களும் வணிகர்களும் (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜூலியஸ் அண்டு கிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 48. (6) வியாபாரச்சரக்கு : வாசனைச் சவர்க்காரங்கள், வாசனைத் திரவியங்கள், உற்பத்தியாக்கத்திற்கு அத்தியாவசியமான தைலங்கள், வண்ணப் பொருட்கள், கூந்தல் தைலங்கள், சுத்திகரிப்புத் தயாரிப்புக்கள், பற்சுத்திகரிப்பு ஆக்கங்கள் உட்பட 48 ஆம் வகுப்பினுள்ளடங்கிய சகல பண்டங்களும். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

KIKU

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1973 ம் ஆண்டு ஜனவரி மீ 27 ம் வ.

10–376/2—12.10.73 திகதிய வர்த்தமானி இல. 81

---

(1) வியாபாரச் சின்னம் இல. 34,643. (2) பெற்ற திகதி : 1972 ம் வருடம் ஜூலை மாதம் 24 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : நிப்பொன் ரோக்கி கபுஷிகைஷா, (நொறிரேக் கோ, லிமிட்டட்) ஜப்பானியச் சட்டங்களின் அடிப்படையில் நிறுவப்பட்டதோர் கூட்டுத்தாபனம் இல. 1, 1–சோமி, நொதிரேக் விறுமச்சி, நிஷி–கு, நகோயா, ஜப்பான் ; உற்பத்தியாளர்களும் வணிகர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜூலியஸ் அண்டு சிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 16. (6) வியாபாரச்சரக்கு : பீங்கான், மண் ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட மேசை அணிகலன்கள், கோப்பைகள், பானைகள், சமையல் அணியடுக்குகள், சமையலறை உபகரணங்கள். (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :

Noritake

இவ்வியாபார உரிமை அடையாளம் வியாபார உரிமை அடையாள இல. 19,629 உடன் இணைக்கப்படவிருக்கிறது.

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1972 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 24 ந் வ.

10–376/3—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 34,734. (2) பெற்ற திகதி : 1972 ம் வருடம் செப்டெம்பர் மாதம் 28 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : நோபல்ஸ் எக்ஸ்பிளோஸிவ்ஸ் கம்பெனி லிமிட்டட், ஸ்கொத்லந்து நாட்டுச் சட்டங்களின் அடிப்படையில் நிறுவப்பட்டு இயங்கி வருமோர் கம்பெனி, நோபல் ஹவுஸ், ஸ்ரீவன்ஸ்ரன், அயர்ஷயர், ஸ்கொத்லந்து, உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜூலியஸ் அண்டு கிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 20. (6) வியாபாரச்சரக்கு : வெடிப்பொருட் பதார்த்தங்கள், அதிர்வெடிகள், உருகிகள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

NETEX

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1973 ம் ஆண்டு பெப்ரவரி மீ 28 ந் வ.

10–376/4—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானி களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டார் என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஒற்றோபர் | 5.10.73 | வெள்ளி | 28. 9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 12.10.73 | வெள்ளி | 5.10.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 19.10.73 | வெள்ளி | 12.10.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 26.10.73 | வெள்ளி | 19.10.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| நவெம்பர் | 2.11.73 | வெள்ளி | 26.10.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 9.11.73 | வெள்ளி | 2.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 16.11.73 | வெள்ளி | 9.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 23.11.73 | வெள்ளி | 16.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 30.11.73 | வெள்ளி | 23.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| திசெம்பர் | 7.12.73 | வெள்ளி | 30.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 14.12.73 | வெள்ளி | 7.12.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 21.12.73 | வெள்ளி | 14.12.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 28.12.73 | வெள்ளி | 21.12.73 | வெள்ளி | ந.ப. 12.00 |

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு டிசம்பர் மீ 29 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.